உ

கடவுள் துணை.

மதிருவல்

894.811
2577

தூக்குப்பாட்டு.

இவை சிறுமணவூர்.

முனிசாமிமுதலியாரவர்களால்,

இயற்றப்பட்டு

பவானி

[illegible]ரவில் பதிப்பிக்கப்பட்டது.

1924

[illegible]இதன் விலை அணா 0—1—0

O-,1mmy,M
N24
18134

உ

கடவுள் துணை.

மதிருவல் தூக்குப்பாட்டு.

இராகம் நாதநாமகிரியை ஆதிதாளம்.

பல்லவி.

மதிமோசம்பாரீர் பெண்ணாலே குடிகெட்ட
விதிவசங்கேளீர்

அநுபல்லவி.

பதிவிரதைப்போல்தினம் புருஷனையேமாற்றி
சதிசெய்துபிள்ளையை க்ஷணத்தில்கொன்றுபோட்ட (மதி)

18130

சரணங்கள்

கொண்டகணவனுக்கு ரெண்டகம்நினைத்திட்டு
குடிகேடிபுருஷனை கிழமென்றுமதிப்பிட்டு
முன்தாரப்பிள்ளைமேல் மோகக்கவலைபட்டு
மோசமென்றறியாமல் ஆசையவன்மேல்வைத்து
கைபிடித்தாளாம் அவன் தாயாச்சுதேயென்று
கால்பிடித்தாலும் யென்னை

பெற்றதகப்பனுக்கு பின்தாரமாச்சுதே
பிள்ளையென்றெண்ணமல் விபரீதம்நினைத்தாயே
பத்துமாதஞ்சுமந்து பால்தாராவிட்டாலும்
பாதுகாப்பதற்கு மாதாவாய்வந்தாயே
மதியெனக்கேபோச்சு அடுக்காதிந்தபேச்சு
உலகத்துக்கேச்சோ எனக்குத்

தாயாகவந்துநீ தாரம்போல்மடக்குறாய்
தந்தையறிந்தாலென்ன நிந்தையாய்முடியுமோ
தெய்வந்தான்பொறுக்குமோ தேசத்துக்கடுக்குமோ
சீச்சியென்னைதிராலே காட்டாதேமுகமென்றான்
பயந்தாப்போல்நின்றாள் தெரியாதென்குற்றத்தை
பொருத்துக்கொள்ளென்றாள் இவன்சகல

சாஸ்திரந்தெரிந்தாப்போல் சட்டங்கள்பேசுறான்
சரிசரியிவனாம் வரவரமசக்கலாம்
யென்றுமனதில்வைத்து மெத்தவுத்தமிபோலும்
மேலுக்குஉபசாரம் [illegible]க்குநாளாக
மனத்தையடக்கைப்பாள் [illegible]வுருகும்படி
[illegible]கள்கொடுப்பாள் அவனை

கண்டால்துயிலேகொஞ்சம் கலேத்துவிலக்குவாளாம்
காமக்குறியைக்காட்டி ஏமாந்துநிற்பாளாம்
அண்டையிலிருந்தாலும் அறியாப்போலிருப்பாளாம்
அடுத்துப்பின்தொடர்ந்தாலும் கடுத்தாப்போலிருப்பாளாம்
சோர்ந்திடுவாளாம் தலேயைவலிக்குதென்று
சார்ந்திடுவாளாம் யெதிரில்
கலேயைக்கலந்துபோட்டு கிணற்றுக்குவருளாம்
காணுமல்வந்தாற்போல் சடுக்கென்றுமறைவாளாம்
இலேயிலே அவன்விட்ட யெச்சிலேத்தின்பாளாம்
யெண்ணம்வரும்படி பண்ணதந்திரத்தாலே (மதி)

கும்மி.

இத்தனேகோலம் வருகிற சண்டாளி - யென்னென்ன வித்தைகள் கற்றிருப்பாள், சற்றுக்கணவன் சந்தேகப்படாமலே சந்திரமதிபோல் நடந்துவாராள் 1

புருஷன்தொழிலுக்குப் போகுமட்டுயிவள் பூமியைப்பார்த்து நிமிராளாம், சிறுவன்வருகையை கண்டுவிட்டாளப்போ கோலக்கிளிபோலக் கொஞ்சுவாளாம் 2

பெண்ணுலேயெல்லாம் முடியுமென்று ஐயா முன்னேர்கள் சொன்னபழமொழிபோல், யெண்ணந்திரும்பா திருந்திட்டப் பிள்ளைக்கு யெப்படியோசுகம் தந்துவிட்டாள் 3

யெப்படியோயிவள் யெண்ணந்திரும்பியே யின்பசுகங்களேக்காட்டிவிட்டு, கைபிடிநாயகன் போலேயிருவரும் ஒப்பியிருந்தார் சிலகாலம். 4

அண்டையயலார் அறிந்துவிட்டாற்பின்னல் கொண்டவன்தன்னே நகைக்கலுற்ருர், கண்டுபிடித்தல்லோ கேழ்க்கவேணுமென்று முண்டைபோல் பேசாதிருந்துவிட்டான் 5

படுத்துயிருவரும் தூங்கையிலேயிவன் பார்த்துப்பிடித்திடவேணுமென்று, கடுத்தமுகக்குறி காட்டாமல்தினம் கண்டுங்காணுமலிருந்துவிட்டான் 6

நித்தமொருநாளாய் போகுதையாயிளன் நோய்பிடிக்கவும் கூடலேயாம், யெத்தனஞ்செய்தே இருக்கையிலே இவர்க்கென்ன விதிவசம் நேர்ந்ததையா 7

கொஞ்சிக்குலாவியே கட்டிலிலேயிவர் கூடியிருக்கையில் கண்டுவிட்டான், பஞ்சபூதங்கள் அஞ்சாமல்கிழவன் பட்டா கத்திதயார் செய்தான் 8

பட்டாகத்திதயாரு செய்தானிவரை வெட்டியேபோடத் துணிந்துகொண்டான், கட்டுசோர்க்கட்டி கொஞ்சதூரத்திற்கு - கால்வழிபோக வேணுமென்றுசொன்னார். (9)

பத்துநாளைக்குள்ளே வந்துவிடுவேன்பெண்ணே பத்திரம் பையனை பார்த்துக்கொள்ளு, சித்தங்கலங்காதே நானில்லையென்றிதோ சீக்கிரம் வாரேனென்றேநடந்தான். (10)

நொண்டிச்சிந்து.

கட்டுசாதங் கையில்பிடித்தான் - இதற்குமுன் கத்தியை யெடுத்தொருபுரம் பத்திரம்வைத்தான், எட்டியிரண்டடி நடப்பான் - உடனே எண்ணாது எண்ணிமனம் குண்ணிடுவான், கைகாலும் பதைபதைப்பான் இவர்கள் கழுத்தை யறிவதெப்போ யென்றுநினைப்பான், ஊர்வழி நடப்பவன்போல் சீக்கிரம் ஏங்கிநடப்பான் காலை வாங்கிநடப்பான், பொழுதெப்போமறையுமென்று - ஐயா பார்த்திருப்பான் முகம் வேர்த்திருப்பான் அந்திப்பொழுதானவுடனே துரிதமாய் வந்தவழியே திரும்பி நெருக்கிக்கொண்டான் பேருஊரு காட்டாமல் - வீட்டிலே பதுங்கிக்கொண்டான் இருட்டில் ஒதுங்கிக்கொண்டான். (தந்தின)

விருத்தம்.

கிழவனையனுப்பிவிட்டேன் கேழ்ப்பவராருமில்லை
மகிழுடனென்னைசேர மன்மதா வாடாயென்றால்
தழுவியேமுத்தமிட்டு தாராளமாகப்பேசி
விழவிழசிரித்துக்கொண்டு விளையாடியிருக்குறாளே.

கட்டியிருகப்பிடிப்பாள் அவனை கனிவாயால் முத்தமிட்டு கடித்திடுவாள், தட்டி துடையை கடிப்பாள் திரும்பியுந் தலையைக்குறுகி மடிமேல் படுப்பாள், முகத்துடன் முகமணைப்பாள் மோகமுடன் முத்தங்கொடுத்தேயிறுக்கிப் பிரண்டிடுவாள், ஜெகத்தினில் தேவர்முதலாய் மனிதரும் சீராயிருந்திட்டாரோ கேளடா என்பாள், பிரகஸ்பதிதேவன் மனைவி தாரையவள் பிள்ளைபோலே சந்திரனைப் புணரலியா, பிரமனும் யோக்கியனோ பெற்ற பெண்முறையாம் ஊர்வசியை பிடிக்கலியா, துரோபதை பதிவிரதையோ கர்னன்மேல் கொடுக்கலியா மனந் துடிக்கலியா, சீதைபதிகடக்கலியா மண்டோதரி சேதியதுவும் சிலதரியாயா கண்ணனது நடவடிக்கை நீயே காணுவிட்டாலுங் கதை கேழ்க்கலியா, உலகமிப்படியிருக்க யிதற்குமுன் யுகங்களும் இப்படியே நடந்திருக்க நயக்குமாத்திரமென்னடா நாலு வேதமும் சாஸ்திரம் குறுக்கிடுமோ, பாவபுண்ணியமேது மனம் போன படியேநடவாவிட்டால் சுகமேது. (தந்தின தனதந்தினம்)

விருத்தம்.

உலகமதிலுதித்தமிக ளென்னைப்போலே
ஒருவருமே யில்லையென்று பசப்பிக்கொண்டு
குலநலமும் முறைவரையும் யெண்ணிடாமல்
கொண்டவனை ரெண்டகஞ் செய்தகழுதை
பலகலையுந் தெரிந்தாப்போல் கதைகள் சொல்லி
பையனையுங் காமுகனாய் செய்துவிட்டாய்
தலையுருள வெட்டுகிறேன் பொருடியென்று
தன் பனதிலெண்ணிமெள்ள நெருங்கினனே.

இவ்விதமாகவே கொஞ்சிக்குலாவி யிருவரிருந்திடும் வேளையிலே யவ்விமனது பொறுக்காமல் கிழவன் ஓங்கியே கத்தியெடுத்துவந்தான் நெஞ்சந்துடித்து பதைத்திடவே கண்கள் நெருப்புப்பொறியும் பறந்திடவே, பஞ்சில்விட்ட தீயைப்போல் கிழவனும் பத்தியெரிந்தல்லோ ஓடிவந்தான். (12)

எனக்கு மனைவியாய் வந்தவளே எந்தன் பிள்ளைக்கு சுகத்தைத் தந்தவளே, உனக்கல்லோ கத்தி வீசுகிறேனென்று - ஓங்கியொரு வெட்டாய் போட்டுவிட்டான். (13)

கத்தியெடுத்தவன் வீசயிலேயிந்த சண்டாரவோளி ம[illegible]ந்துவிட்டாள், பெற்றசுதனும் பிள்ளையின்கழுத்து பளீரென்று இரண்டாய் விழுந்துதையா. (14)

இரண்டாய் சிரவு விழுந்திடவுமிந்த முண்டம் விழுந்து புரண்டிடவும், கண்டவிடமெல்லாம் ரத்தபிரவாகம் கண்ணாலே கண்டு மயங்கி விட்டான். (15)

பிள்ளைகழுத்து விழுந்திடவேயிந்த பிர்மஹத்திசுத்தி முழித்திடவே கள்ளவிபசாரி அம்மணமாகத்தான் கந்தையைச் சுற்றிக்கொண்டோடி வந்தாள். (16)

கத்தியை கையில் பிடித்துக்கொண்டு இவன் பித்தனைப்போல பிணத்திக்கொண்டு, சுற்றுமுற்றுமிந்தக் கழுதையெங்கேயென்று சுணங்களைப்போலே யலையலுற்றான். (17)

குடிக்கியெமனாய் வந்தமுண்டையிவள் கூச்சலோ வெழுறு கேட்டிடுமாம், அடித்துப்புரண்டு தெருவில்ஜெனம் ஆயிரமாயிரஞ் சேர்ந்து விட்டார். (18)

அண்டையயலுள்ள ஆணும்பெண்ணும் - புலியாளும் கவர்ன்மெண்டு சேவகரும் முண்டையிவளிட்ட [illegible] ஜெனம் மூலபலம் போல சேர்ந்துவிட்டார் (18)

வீதியடங்காத கூட்டங்கண்டுஉயிர் விட்டபிணம்போல நின்றுவிட்டான், ஓதிவாயுந்திறக்க வில்லைகிழவன் ஒன்றுமில்லாமல்மயங்கிவிட்டான்.

கட்டிக்கிழவனைக் கொண்டுவந்தாருடன் தட்டையுங்கூடவே கெட்டிவந்தார், பட்டாஜெயிலிலே போட்டடைத்துநாளைக் கேசுகளாரம்பஞ் செய்தனராம் 21

மாண்டபிணத்தையுந் தூக்கிவிட்டாரிவரை மாரிஜெயிலிலடைத்துவிட்டார், ஆண்டவன்போலவே ஜட்ஜியெதிரிலே அனியாயக்கேசை விளம்பலுற்றார் 22

சீராய்கிழவ னுரைத்துவிட்டானிவள் சித்திராங்கிபோல் மறைத்துவிட்டாள், தாறுமாரெல்லாந் துரைகள்தெரிந்தபின் தலையைவாங்கவும் தீர்மானித்தார் 23

வைகாசிமாதம் இருபத்தெட்டாந்தேதி வாரமோதிங்கட்கிழமையிலே, பையவே ஆறு மணிக்குள்ளே வாங்கிட பார்லிமெண்டாரிட உத்திரவாம் 24

உத்திரவுவரப் பார்த்திருந்தாரிவனை பத்திரமாகவே காத்திருந்தார், தொத்திவருகின்ற தந்தியின் மார்க்கமாய் தூரத்துசேதியறிந்துகொண்டார்

சேதியைக்கண்டதுந் திங்கட்கிழமையில் ஜுன்மாதம் ஒன்பதாந் தேதியினில், வாதிகளெல்லாஞ் சொல்லிவாய் மூடுமுன் வாங்கிவிட்டாளிவன் சிரசை 26

கிழவன் சிரசையும் வாங்கிவிட்டாரிந்த கழுதையுங்கூடவே சிதை செய்தார், யிழிவாகதொழில் புரிந்தல்லவோயிவர்க் கித்தனை துன்பமு நேர்ந்துதையா 27

தாயைப்புணர்ந்த கதையுரைத்துரெண்டு நாள்வலிதிரா திருக்குமுன்னே, ஒருபாவியுடக்கதை வந்துதையா அதை பாடி முடிக்கிறேன் நேசர்களே 28

பணத்தில்பெரியோ னொருசீமான் திருப்பாப்புலியூரி லரண்மனையாம், குணத்தையுரைக்கவோர் பிள்ளையில்லாமலே கோடானகோடி செலவழித்தான் 29

முன்செய்தகருமத் தினாலேயவர்க்கு முக்கண்ணன்பிள்ளை யில்லாவிடினும், தன் ஆசைக்கோர்பிள்ளை தத்தக்குவாங்கியே தாவிவளர்த்து வருகையிலே 30

சேர்த்துவளர்த்து கலிதீர்ந்துகல்ல சித்திரப்போலே சீராட்டி பார்த்தீபன்போலே வளர்த்துவருகையில் பத்தினிக்கோர்பிள்ளை தோன்றினதாம் 31

தத்தெடுக்கப்பிள்ளை சீராய்வளர்ந்தபின் றனக்கொருபிள்ளை பிறந்ததினால், பெற்றமக்களை தன்னை கொஞ்சிவளர்ப்பதை பெரியபிள்ளை யறிந்தானும் 32

தன்னைமறந்து யிருப்பதுவும்அவர் தங்கள்மகனை வளர்ப்பதுவும், எண்ணிபலவாறாய மனஞ்சலித்துஒரு எத்தனஞ்செய்தானும் நேசர்களே.

நொண்டிச்சிந்து.

பிள்ளையில்லாததினால் நம்மை பிரியமுடனிதுவரை வளர்த்துங்கார் உள்ளபொருள் பூஸ்திதியும்-அப்பா-உனக்கேயளிப்பேனென்று செப்பிவந்தார், தனக்கொரு பிள்ளை பெறவே வேரெண்ணம் தரித்துக்கொண்டார் நம்மை வெறுகலுற்றார், இனியிந்த பிள்ளையை வைத்தால் நமக்கு யெள்ளளவும் கிட்டாது என்று துணிந்து, வெட்டிவிட கத்தியெடுத்து சகோதரனை வேடிக்கைகள் காட்டி மெத்தைமேலழைத்துப்போய்யொருபுரத்தனியேவைத்து அப்படி இப்படிப்பார்த்தான் அங்கை யாருமில்லா வேளையென்று கத்தியெடுத்தான், சிரிப்புகள் காட்டிக்கொண்டே கத்தியினால் சடுக்கென்று ஒரு வெட்டாய் வீசியெரிந்தான் கைபிரண்டு வெட்டத்துணிந்தானந்தக் காப்புக்கொலுசு ரெண்டும் உருவி[illegible]டான் - ஆருக்குமகப்படாமல் தனது அரண்மனைநாடி சீக்கிரம் நடந்தான் பின்னொரு நாழிகடந்து பெற்ற பிள்ளைகளைக்காணோமென்று விடுமுழுதும் அன்னையுந்தகப்பனிருவர் அடா அப்பா மகனேயென்று அழைத்துக்கொண்டு மெத்தைபடி யேறிபார்த்தாரங்கே மழைபொழிந்ததுபோல் உதிரங்கண்டார் கைவேறு கால் வேறு தலைவேறு கரும்புபோல் உடல்வேறு புரளக்கண்ட-ரவர்படுந்துபரமதை ஆதி சேஷனுஞ்சொல்லியழைத்தரமல்லவாம் (தந்)

கும்பி

பிள்ளையிருந்த அதிசயத்தைக்கண்டு பெரிமகனைத் தேடுகையில், கள்ளமில்லாமலே காணோமென்றவர் கலங்கியழுதே தேடலுற்றார் 34

தாயுந்தகப்பனும் தேடிக்கொண்டேயிவனை தாணியெங்குமே அலையலுற்றார், கூலியேபந்துக்கள்வேறொருவழியாய்மனங்கலங்கி அழுகையிலே

பிரிஞ்சிகவர்னர் ஆளுமந்தடவுன் புதுச்சேரிப்பட்டணந் தன்னில் லொரு, நிதியன்சாலையென்னுந் தெருவில் அவனை ஒடியேகண்டு பிடிக்கலுற்றார் 36

திரேகமுழுவதும் ரத்தக்குறிகளும் - திருடிக்கொண்டோடிய சொத்துக்களும், ஆருமேசாட்சிகள் வேண்டாமல் அவனுக்- கதுவே திருஷ்டாந்திரமாச்சுதைய்யா. 37

கட்டியே ஜட்ஜி யெதிரில்விட்டாரிவன் - கையிலுள்ள சொத்தும் முன்னே வைத்தார், பட்டகதையெல்லாம் கேட்டுவிட்டு இந்த பாவியைத் தூக்கிலேத்துமென்றார்.

சொல்லிவாய் ஜட்ஜியும் ஜூடுமுன்னே - சூழ்ந்துகொண்டாரே தூதரைப்போல், கொல்லத்துணிந்து கொலைசெய்த பாவியை கூசாமல் தூக்கிலே எற்றிவிட்டார் (39)

பிள்ளையைத்தாயார் புணர்ந்தகதையதின் - பின்னாலே தம்பியை கொன்றகதை, விள்ளப்போனவின்னம் வேணதுண்டுவிட - மில்லாமல் விட்டேன் ஜெகத்தோரே (40)

பாவிகளின்கதை தீர்ந்துதையாயிதைப் பாடியேவாய்கூட நோகுதையா கூவிசிலபுத்தி சொல்லுகிறேனதை - கொண்டனைக்கவேணும் நேசர்களே

துரோகத்தொழிலை நடத்தவேண்டாமிந்த - துன்பத்துக்கு இடம் வைக்கவேண்டாம், திரேசமேரீரின் குமிழாகும் வீண் - தோஷந்தேடாதீர்கள் நேசர்களே. (42)

ாதிமேல் மையலைக்கொண்டல்லவா லங்கை - மன்னனழிந்ததுங் கேழ்க்கிலையா, தோதக புத்தியை நீக்கிவிட்டுநல்ல சுகத்தைத்தேடுங்கள் நேசர்களே. (43)

காமம் எவருக்கும் யேமனையாகவரை கண்டவாருமே யில்லையையா பூமியில்வல்லவ னென்றுபெயர்கொள்ளும் - புத்தியைத்தேடுங்கள் நேசர்களே. (44)

பெண்ணாலேயிந்திரன் புண்ணாளும்பாலச் - சந்திரன் தேகமும் பின்னமானான், என்னகணக்குண்டோ பெண்ணாலெகெட்டவ - ரெத்தனையோகோடி நேசர்களே. (45)

மதிருஸ் தூக்குப்பாட்டு

முற்றிற்று.

18139